# விலைமனு கோரல்

## விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

## மடிக் கணினிகளுக்கான விலை மனு கோரல் – 2026

## விலை மனு இலக்கம் – SD/VII/2026

1. இலங்கை நில அளவைத் திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளரினால் மடிக் கணினிகளுக்கான விலை மனுக்களைக் கோருவதற்கு தகுதி வாய்ந்த மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விலை மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரம் | மடிக் கணினிகள் 135 (குறைந்தபட்சம்) இற்கு |
|---|---|
| **மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூ)** | 50,000,000.00 |
| **விலை மனு காப்பீடு (ரூ.)** | 500,000.00 |
| **விலை மனு காப்பீடு செல்லுபடியாகும் காலம்** | 2026.10.09 ஆம் திகதி முதல் 2027.01.21 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |
| **மீள செலுத்தப்படாத விலை மனுப் பத்திரக் கட்டணம் (ரூ.)** | 12,500.00 |
| **விலை மனு கோரும் ஆவணத் தொகுதி மற்றும் விண்ணப்பப்படிவம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள வேண்டிய திகதி மற்றும் நேரம்** | 2026.09.18 ஆம் திகதி தொடக்கம் 2026.10.08 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை |
| **முன் விலை மனு ஒன்றுகூடல்** | 2026.09.29 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் |
| **விலை மனு வைப்புச் செய்தலை முடித்தல்** | 2026.10.09 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |
| **விலை மனுக்களைத் திறத்தல்** | 2026.10.09 ஆம் திகதி பி.ப. 2. 05 இற்கு பெறுகை மற்றும் வழங்கல் பிரிவு |
| **விலை மனு செல்லுபடியாகும் காலம்** | 2026.10.09 ஆம் திகதி முதல் 2026.12.24 ஆம் திகதி வரை செல்லுபடியாக வேண்டும். |

2. மதிப்பிடப்பட்ட செலவினம் மேற்குறிப்பிட்ட அட்டவணையின் பிரகாரம் அமையும்.
3. கட்டளை பெறப்பட்டு 02 மாத (08 வாரங்கள்) காலத்திற்குள் விநியோகத்தை வழங்குதல் வேண்டும். இவ்வாண்டின் பெறுகையின் கீழ் கொள்வனவுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதால் கணக்குகளைத் தீர்க்கின்ற திகதியைத் தாண்டிய நாள் நீடிப்பு கருத்தில் கொள்ளப்படாது.
4. விலை மனு கோருதல் தேசிய போட்டித்தன்மையான விலை மனு கோரல் நடைமுறைகளுக்கு அமைய முன்னெடுக்கப்படும்.

5. ஆர்வம் காட்டுகின்ற தகுதி வாய்ந்த விலை மனுதாரர்களுக்கு இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்) | snrsspns@survey.gov.lk அவர்களிடம் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொண்டு பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெறுகை ஆவணங்களைப் பரிசீலிக்க முடியும்.
6. தகைமைகள், தேவைப்பாடுகள் மற்றும் மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் சகல வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகள் குறித்து கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.
7. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலை மனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு கோரிக்கை முன்வைப்பதன் மூலம், பூரண விலை மனுத் தொகுதி ஒன்றை மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மீள செலுத்தப்படாத கட்டணத்தை பின்வரும் முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ள சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்திய பின்னர் கொள்வனவு செய்ய முடியும்.
8. விலை மனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் அல்லது பின்வரும் முகவரியில் உள்ள விலை மனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரிக்கு பிரத்தியேகமாக வருகை தந்து கலந்து கொள்கின்ற விலை மனுதாரர்கள்/ பிரதிநிதிகள் முன்னிலையில் விலை மனுக்கள் திறக்கப்படும். சகல விலை மனுக்களுடனும் விலை மனு காப்பீடும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
9. விலை மனுக்களை முன்வைக்கும் போது உரிய உருப்படிக்காக செலுத்தப்பட்ட விலை மனுக் காப்பீடு/ விலை மனுக் காப்பீட்டின் பிரதி உள்ளடங்கிய முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மடிக் கணினிகளுக்கான விலை மனு கோரல் – 2026"** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**மேற்குறிப்பிட்ட உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்ட முகவரி :** சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகை மற்றும் வழங்கல்), நில அளவையாளர் நாயகத்தின் திணைக்களம், இலக்கம் 150, கிருல வீதி, கொழும்பு 05. | தொலைபேசி / தொலைநகல் – 0112 368106 | snrsspns@survey.gov.lk

தவிசாளர்,
திணைக்கள பெறுகைக் குழு சார்பாக,
இலங்கை நில அளவைத் திணைக்களம்.
2026.09.18